செ.வெ.எண்: 08 நாள்: 07.06.2019.

***தேனி மாவட்டம்***
***நிபா வைரஸ் தாக்குதல் தமிழகத்தில் பாதிப்பு ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்:-***

*********

தேனி மாவட்டம், அணைக்கரைப்பட்டி ஊராட்சி, முந்தல் கிராமத்தில் உள்ள சோதனைச்சாவடி அருகே நிபா வைரஸ் பாதிப்பு தமிழகத்தில் பரவாமல் தடுத்திட மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமினையும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் நடவடிக்கைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

***இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-***

கேரளா மாநிலத்தின் சில பகுதிகளில் நிபா வைரஸ் தாக்குதலின் அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ளதால் அதன் பாதிப்பு தமிழகத்தில் ஏற்படாதவாறு, தமிழக அரசு பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்திலிருந்து கேரளா செல்லும் வழிகளான குமுளி, கம்பம்மெட்டு, போடிமெட்டு ஆகிய பகுதிகளில் மருத்துவக்குழுவினர் முகாம் அமைத்து, கேரளா மாநிலத்திலிருந்து வரும் வாகனங்கள், பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் மற்றும் தினசரி கேரளா பகுதிக்கு வேலைக்கு செல்பவர்கள் ஆகியோரிடத்தில் நிபா வைரஸ் தாக்குதல் பாதிப்பு உள்ளதா என தீவிர கண்காணிப்பு பணிகள் சுகாதாரத்துறையினர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வின் போது, காய்ச்சல் கண்டவர்கள் இருந்தால் அவர்களை தனி வார்டுகளில் உள் நோயாளியாக அனுமதித்து தீவிர சிகிச்சை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிபா வைரஸ் பரவுவதை தடுப்பதற்கு தேவையான மருந்துகளையும் முன்னெச்சரிக்கை கருவிகளையும் தயார் நிலையில் வைத்திடவும், வௌவால்கள் கடித்த பழங்கள், பன்றிகள் மூலமாகவும் நிபா வைரஸ் பரவுவதற்கு வாய்ப்புள்ளதால் பன்றி வளர்ப்பவர்கள் மற்றும் பொதுமக்களிடையே உரிய விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறருது. நிபா வைரஸ் குறித்து பொதுமக்கள் தேவையற்ற பீதி அடையவோ, அச்சம் கொள்ளவோ வேண்டாம். பொதுமக்கள் எந்த வகையான காய்ச்சல் என்றாலும் முறையான மருத்துவ பரிசோதனை மேற்கொள்வதுடன் உடனடியாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசு மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற வேண்டும்.

நிபா வைரஸானது பழம் தின்னி வௌவால்கள், பாதிக்கப்பட்ட வௌவால்களின் சுரப்புகள் மற்றும் எச்சம், வௌவால்கள் மூலம் பன்றிகளுக்கும் நோய் தொற்றிற்கு ஆளாகும் பன்றிகள் மூலம் மனிதர்களுக்கும் பரவுகிறது. காய்ச்சல், தொண்டைப்புண், தசைவலி, இன்புளுயன்சா காய்ச்சல் போன்றவை ஆரம்ப நிலை அறிகுறிகளாகவும், வயிற்றுப்போக்கு, வாந்தி, கல்லீரல் மற்றும் சிறுநீரக செயலிழப்பு, கண், காது, மூக்கில் இரத்தம் வருதல், மூளை அழற்சி போன்றவை தீவிர நிலை அறிகுறிகளாகும்.

எனவே, காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவ சிகிச்சை, மூளை நரம்பியல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என கண்காணித்து சிகிச்சை அளித்தல், நோய் அறிகுறிகள் இருப்பின் மருத்துவமனையில் உள் நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற வேண்டும். இதனை தடுத்திட பொதுமக்கள் அவ்வப்போது கைகளை கழுவியும், பழங்களை சுத்தமான நீர் அல்லது சுடு தண்ணீரில் கழுவி உட்கொள்ள வேண்டும். நன்கு கொதிக்க வைத்து ஆறிய நீரை பருக வேண்டும். பறவைகள் கடித்த பழங்களை சாப்பிடக் கூடாது. சுற்றுப்புறங்களை சுத்தமாகவும், சுகாதாரமான முறையில் பராமரித்திட வேண்டும். நமது மாவட்டம் கேரள மாநில எல்லையில் அமைந்துள்ளதால் நிபா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடடிவக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, பொதுமக்கள் அரசுத்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் நிபா வைரஸினை நமது மாவட்டத்தில் வராமல் தடுத்திட முடியும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.வரதராஜன் உட்பட பலர் உள்ளனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**